இணைப்பு–I.

[409-ம் பக்கங்களில் 641 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

உயர்நிலைப்பள்ளிகளில் கணிதம் மற்றும் அறிவியல் கற்பிக்கும் பி. டி. ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியளிப்பதற்காக 1–6–1974 நாளிட்ட 1121 எண்ணுள்ள கல்வித் துறை அரசாணையில் ரூ. 11.87 லட்சம் ஒப்பளிக்கப்பட்டது. புதிய பாடத்திட்டத்தின்படி கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களை கற்பிக்க வல்ல அறிஞர்களும், அப்பாடங்களுக்கு புதிய பாடத் திட்டத்தைத் தயாரித்தவர்களும், அப்பாடங்களுக்குப் புதிய பாட நூல் எழுதியோரும் மேற்சொன்ன பணியிடைப் பயிற்சியை எவ்வாறு அளிப்பது என்பது பற்றி சமீபத்தில் கலந்து பேசினர். அவ்வமயம் பணியிடைப் பயிற்சிக்கான செயல் முறையை வகுக்க குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மேற்சொன்ன பணியிடைப் பயிற்சி அளிக்க இருக்கும் பணிப்பயிற்சி தரும் ஆசிரியர்களை (Teacher Educators) உருவாக்கும் வல்லுநர்கள் (Master Educators) தற்சமயம் பயிற்சியின் தன்மையும் நிகழ்ச்சி நிரலையும் நிர்ணயிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பணிப்பயிற்சிதரும் ஆசிரியர்கள் வல்லுநர்களிடம் முதற்கண் பயிற்சி பெற்று, அதன்பின் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிப்பர்.

1975 ஜனவரி 2–11 நாட்களில் ''பணிப்பயிற்சி தரும் ஆசிரியர்கள்' சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மையங்களில் பயிற்றுவிக்கப்பட்டனர். அவர்கள் 1975, மே, ஜூன் மாதங்களில் பி. டி. ஆசிரியர்களுக்கு பணியிடைப்பயிற்சி அளிப்பார்கள்.

In G.O. Rt. No. 1121, Education dated 1st June 1974, the Government sanctioned a sum of Rs. 11.87 lakhs for giving in service training to B.T. Assistants handling mathematics and science classes in high schools. For the implementation of this scheme, experts in the field of teaching Mathematics and Science according to the new syllabus and those who were involved in the preparation of the new syllabus in Mathematics and Science and in the writing of text books for the classes met recently and committees have been formed to work out the scheme for giving inservice training.

The master educators are meeting now and are setting up working papers for the courses and the programme of work to be done in the centres. They will give orientation training to teacher-educators who in turn would train the teachers.

During January 1975 (from 2nd January 1975 to 11th January 1975) the teacher educators alone were oriented in new Science and new Mathematics by master-educators in the following centres :—

1. Madras.
2. Coimbatore.
3. Tiruchirappalli,
4. Madurai and
5. Tirunelveli.

These teacher-educators will give orientation courses to the B.T. teachers in May and June 1975.

இணைப்பு-II.

[421-ம் பக்கத்தில் 5-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.]

தொடர் எண்ணும் மாவட்டமும்.	மாநில குடும்பநலத் திட்டங்களில் தீவிர பிரச்சாரத்திற்கான செலவு. 1972	1973
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
1. செங்கல்பட்டு	11,74,489	..
2. மதுரை	54,629	..
3. இராமநாதபுரம்	11,38,729	..
4. திருநெல்வேலி	25,92,299	..
5. தென்னாற்காடு	26,83,303	41,08,404
6. நீலகிரி	42,409	..
7. தர்மபுரி	3,36,000	..
8. சேலம்	13,14,930	7,21,125
9. வட ஆற்காடு ..	84,918	24,258
10. கோயம்புத்தூர்	23,87,220	..
11. தஞ்சாவூர்	37,77,263	9,51,500
12. திருச்சிராப்பள்ளி	36,12,340	1,80,227